Register No. | | | | | | | | |

**FSD**

**4967–21**

(For the candidates admitted from 2009-2010 to 2016-2017)

B.A.B.L./B.A.LL.B. DEGREE EXAMINATIONS, FEBRUARY 2022.

(Five - year Regular Course)

Fourth Year – Seventh Semester

ADMINISTRATIVE LAW

Time : Three hours    Maximum : 100 marks

PART A — (3 × 12 = 36 marks)

Answer THREE of the following in not exceeding six pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் கீழ்கண்டவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. Elucidate critically the doctrine of separation of powers and state the extent to which this doctrine is incorporated in the Constitution of India.

   சட்டத்திறன்களின் பிரித்தல் கோட்பாட்டை திறனாய்வு செய்து, இந்த கோட்பாடு எந்த அளவுக்கு இந்திய அரசமைப்பில் கூட்டிணைவாக சேர்க்கப்பட்டிருக்கிறது என்பதை திறனாய்வு செய்க.

2. Discuss the effectiveness of Parliamentary control of delegated legislation.

   நிர்வாகச் சட்டமியற்றும் அதிகாரத்தை பாராளுமன்றமானது கட்டுப்படுத்துவதற்கான தகுதிநிலையை விவாதிக்கவும்.

3. Explain the applicability of the principle of promissory estoppel in the administrative law with decided cases.

   தீர்மானிக்கப்பட்ட வழக்குகளுடன் நிர்வாகச் சட்டத்தில் முரண் தடைக் கொள்கையின் பயன்பாட்டை விளக்குக.

4. Explain the maxim Audi Alteram Partem with the help of decided cases.

   மறுபக்கம் விசாரனை செய் என்ற கோட்பாட்டினை தீர்மானிக்கப்பட்ட வழக்கின் உதவியோடு விளக்குக.

5. Examine the significance of the writ of mandamus as a means to control administrative action.

   நிர்வாகச் செயலைக் கட்டுப்படுத்துவதில் செயலுறுத்தும் நீதிப்பேராணையின் முக்கியத்துவத்தை ஆராய்க.

PART B — (8 × 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following in not exceeding 2 pages each :

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் எழுதுக.

(a) Personal Bias
நபர் சார்ந்த மனச்சாய்வு

(b) Lokpal
லோக்பால்

(c) Donoughmore Committee
டோனாகுமோர் குழு

(d) Ouster of Jurisdiction
அதிகாரவரம்பை விலக்கல்

(e) Droit Administratift
ட்ராய்ட் அட்மினிஸ்ரேட்டிப்

(f) Committee on public undertaking
பொது நிறுவனங்கள் குறித்து குழு

(g) Rudal Shah *v.* State of Bihar
ருதுல்ஷா எதிர் பீகார் அரசு

(h) Writ of Certiorari
நெறியுறுத்தும் நீதிப்பேராணை

(i) Notice to Government under Section 80 of the Civil Procedure Code.
உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு (80)-ன் கீழ் அரசிற்கு அளிக்கும் அறிவிப்பு

(j) Ultra vires.
அதிகார வரம்பு மீறுகை.

PART C — (4 × 4 = 16 marks)

Answer FOUR of the following (in not exceeding two pages each) by referring to relevant provisions of law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கினுக்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. 'X' has been arrested under the Goondas Act as his presence in the society is dangerous to law and order. But under the relevant Act, he can be arrested if his presence is against public order. 'X' contends that he can be detained only when his presence is against public order. But the state contended that the ground of law and order and public order are one and the same. Decide.

'X' என்பவர் சமுதாயத்தில் இருப்பது சட்டம் ஒழுங்கை பாதிக்கும் என்று குண்டர்கள் சட்டத்தில் கைது செய்யப்பட்டார். ஆனால் குண்டர்கள் சட்டத்தில் ஒருவர் சமூகத்தில் இருப்பது பொது அமைதியைப் பாதித்தால் மட்டுமே கைது செய்யப்படலாம். 'X' தான் சமுதாயத்தில் இருப்பது பொது அமைதியைப் பாதித்தால் மட்டுமே இச்சட்டத்தின் கீழ் தன் கைது செய்ய முடியும் என்று வாதிட்டார். சட்டம் ஒழுங்கு மற்றும் பொது அமைதி இரண்டுமே ஒன்று தான் என அரசு வாதிடுகிறது. முடிவு செய்க.

8. A Committee was constituted by the state for recommending purchase of books to the state libraries. One of members of committee recommended the books for which he was the author. Explain its validity.

அரசு நூலகங்களுக்கு புத்தகங்கள் வாங்குவதற்கு ஒரு குழு அரசால் அமைக்கப்பட்டது. அக்குழுவில் உள்ள ஒரு அங்கத்தினர் தான் எழுதிய புத்தகத்தை பரிந்துரை செய்தார். இதன் செல்லுபடி நிலையை விளக்குக.

9. The Bihar State Government issued a notification excluding an area from the territorial jurisdiction of a Grama Sabha and included the same in another Grama Sabha. The action of the government was challenged on the ground that the residents of the particular area were not heard before issuing the notification. Decide.

ஒரு ஊரகத்தில் அடங்கியுள்ள ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பை அதிலிருந்து பிரித்து மற்றொரு ஊரகத்தில் சேர்ப்பதற்கான அறிவிப்பை பீகார் மாநில அரசு வெளியிட்டது. அக்குறிப்பிட்ட நிலப்பரப்பில் வாழும் மக்களை கேட்காது அத்தகைய அறிவிப்பை வெளியிட்டுள்ளதால் அரசின் இச்செயல் செல்லத்தகாதது என மறுதலிக்கப்படுகிறது - தீர்மானிக்க.

10. Under the Essential Commodities Act the authority has fixed the price of the essential commodities. Rajesh a merchant, challenged the price fixation on the ground that he was not heard before fixing the price. Decide.

அத்தியாவசிய பொருட்கள் சட்டத்தின்படி ஒரு அதிகாரி அத்தியாவசிய பொருட்களின் விலையை நிர்ணயம் செய்கிறார். ராஜேஸ் என்ற வியாபாரி விலை நிர்ணயம் செய்யப்படும் முன்பு தனது கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு வழங்கப்படவில்லை என்று மறுதலிக்கிறார். முடிவு செய்க.

11. 'X' is an employee of the Government of Tamil Nadu. Disciplinary proceedings have been initiated against him. He requires his service register, which is with the custody of the state, to prove his innocence. The state replies that since the service register is relating to the affairs of the state, it cannot be disclosed to 'X'. Decide.

'X' என்பவர் தமிழ்நாடு அரசின் ஊழியராகும். அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. தனது தவறற்ற நிலையை நிரூபிக்க அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் அவரது பணிப் பதிவேட்டை வேண்டுகிறார். பணிப்பதிவேடானது அரசு விவகாரத்தைக் குறித்ததால் அதனை 'X' விற்கு காட்ட இயலாது என்று அரசு கூறுகின்றது. முடிவு செய்க.

12. A military truck carrying jawans was going towards the training spot. On the way it met with an accident due to negligent driving and as a result the pedestrian died on the spot. The widow of the deceased man claimed compensation. Will she succeed?

இராணுவ வீரர்களை பயிற்சிக்காக ஏற்றிக் கொண்டு செல்லும் வழியில் ஓட்டுநரின் கவனக்குறைவால் இராணுவ வண்டி விபத்துக்குள்ளாகிறது. அதில் நடந்து சென்று கொண்டிருந்து ஒருவர் இறந்துவிடுகிறார். இறந்தவரின் மனைவி இழப்பீடு கோருகிறார். அவர் வெற்றி பெறுவாரா?

———————